Madras Rubber Factory

*780 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state the steps taken by the Government to settle the dispute between the management and workers of the Madras Rubber Factory, Thiruvethiyur during September 1971 ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : விவர அறிக்கை a ஒன்று மன்றப் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, சில கோரிக்கைகளை வைத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். இப்போது கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆகியும் இன்னும் தகராறுகள் தீராமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, அதுபற்றி விபரம் இல்லை.

Rehabilitation of Repatriates

*781 Q.—Thiru N. K. PALANISWAMY }
Thiru N. KITTAPPA : } Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :—

(a) whether there is any proposal to rehabilitate the repatriates from Ceylon in the Andaman Islands ; and

(b) If so, the details thereof ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :

(அ) ஆம்.

(இ) 1,200 இலங்கை அகதிகளுக்குப் புதுவாழ்வு அளிப்பதற்காக ரூ. 450 லட்சம் செலவில் அந்தமானில் 6,000 ஏக்கர் நிலப்பரப்பில் ரப்பர் தோட்டங்களை அமைக்கும் திட்டத்திற்கு இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டத்தை அந்தமான் நிர்வாகம் செயல்படுத்தி வருகிறது. இலங்கை அகதிகளிடையே உள்ள மீனவர்களை அந்தமானில் குடியேற்றுவதற்கான செயற்குறிப்பு ஒன்றும் அந்தமான் நிர்வாகத்தின் பரிசீலனையில் உள்ளது. இச் செயற்குறிப்பின் விவரங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

திரு. என். கே. பழனிச்சாமி : சிலோனில் இருந்து வரக்கூடியவர்களுக்கு இதுபோல் மானியமும், கடன் உதவியும் கொடுக்கிறோம். அவர்களை அந்தமானுக்கே அனுப்பி உபயோகமான வேலை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சிலோனில் இருந்து வருகிற அகதிகளுக்குப் பெரும்பாலும் தோட்டவேலை தான் நன்றாகத் தெரிகிறது. ஆகவே அந்தமானில் தோட்ட வேலைகளில் அவர்களை குடியமர்த்து

---

a 685–686-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

வதோடு கூட இங்கும் கன்னியாகுமரியில் ரப்பர் தோட்டங்கள் வைக்க சில நிலப்பரப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் கூனூரிலும் தோட்டப் பயிர் வைக்க அவர்களுக்கு உதவப்படுகிறது. அந்தமானில் குடியமர்த்த மத்திய அரசே திட்டமிட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : இப்போது அந்தமான் தீவில் தமிழர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் லோக் சபாவுக்கு ஒரு தமிழர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவரும் மந்திரியாக அங்கே இருக்கிறார். ஆகவே அந்தமானுக்கு சீஃப் கமிஷனராகவும் ஒரு தமிழரையே நியமனம் செய்ய வேண்டும் என்பதை நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்துமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்தமானில் தமிழர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே அங்குள்ள அதிகாரிகளும் தமிழர்களாக இருத்தல் வேண்டும் என்று அங்குள்ளவர்கள் விரும்புகிறார்கள் என்கிற கருத்தில் தான் அங்குள்ள சீஃப் அட்மினிஸ்ட்ரேடர் தமிழ் அதிகாரிகளை அனுப்பி வைக்குமாறு எங்களுக்கு எழுதுகிறார்கள். நாங்கள் அனுப்பி வைக்கிறோம். சீஃப் அட்மினிஸ்ரேட்டரை நியமிக்கிற பொறுப்பு மத்திய அரசாங்கத்தின் நேரிடை அதிகாரத்தில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : அண்மையில் அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் அந்தமானுக்குச் சென்று வந்தார்களே, அங்கே அகதிகள் குடியமர்த்துவது பற்றி சீஃப் அட்மினிஸ்ரேட்டரிடம் கலந்து பேசி வந்தார்களா? விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதுபற்றியும் ஆராயப்பட்டது. இன்றைய தினம் ஆறுயிரம் ஏக்கரா நிலத்தில் ஆயிரத்து அறுநூறு சிலோன் அகதிகள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு வேலை அளிக்க ரப்பர் தோட்டப் பயிர் செய்ய வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அங்கு பத்தாயிரம் ஏக்கரா நெல் சாகுபடி செய்வதற்கு லாயக்கான நிலம் இருக்கிறது. பர்மாவில் இருந்து வரும் அகதிகள் சிறு வியாபாரம் செய்யவும், விவசாயம் செய்யவும் தான் பழக்கமுள்ளவர்கள். ஆகவே பர்மா அகதிகளை அங்கே குடியேற்றி நெல் சாகுபடிக்கு வேண்டிய வசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்தித் தரலாம் என்பதும் அவர்களோடு சேர்ந்து யோசிக்கப்பட்டது.

*782 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the progress made in establishing rubber plantations for the Burma repatriates in this State ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இம்மாநிலத்தில் பர்மா அகதிகளுக்காக ரப்பர் தோட்டங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுமில்லை. ஆனால், இலங்கை அகதிகளுக்கு புதுவாழ்வு அளிப்பதற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டம் வளர்க்கும் திட்டம் ஒன்றை நாம் செயல்படுத்தி வருகிறோம். இத்திட்டத் திற்காகும் மொத்தச் செலவு ரூ. 124.63 லட்சம், 2,000 ஏக்கர் பரப்பளவில் ரப்பர் தோட்டம் வளர்க்கப்படும்.